இடி

ஆசிரியர்:
பண்டிட் ஜெயிலானி, M. A., (USA)
தாராபுரம்.

"நகுதற் பொருட்டன்று நட்டல்-மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

குயில் மார்க் பீடி
உபயோகியுங்கள்

ஏஜண்டு:
K. H. ஷேக்தாவூத்,
புது மார்க்கட், கோவை.

இடி 4 | தமிழ் வாரச் செய்தித்தாள் | ஒலி 2

23-2-54 செவ்வாய்கிழமை

புதுக் கல்வித் திட்டம்!

இன்றைய புதுக்கல்வித் திட்டத்திற்கு முன்னுள்ள திட்டம் அமுலில் இருந்தபொழுது பலர் அக்கல்வித் திட்டம் நாட்டிற்கு பலன்படாத முறையில் இருப்பதாக கூறினார்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளால் புகுத்தப்பட்டத்திட்டம் என்றும், சோம்பேரிகளின் சிருஷ்டி என்றும், அடிமைகளை வளர்க்கும் மடம் என்று தேசியப்பற்றுடைய பலர் பல கோணங்களில் எடுத்துக் கூறினார்கள். சிறுவர்கள் அனைவர்களும் படிக்க முடியாத அமைப்பு அன்றைய கல்வித் திட்டம் என்று கூறப்பட்டது. அந்தத் திட்டத்தைமாற்றி புதியதொரு கல்வித் திட்டம் வரவேண்டும் என்று பலர் கூறினார்கள். மக்களும் கல்வித்திட்டத்திலே மாற்றம் காணவேண்டும் என்று கருதினார்கள்.

கனம் முதன் மந்திரி ராஜகோபால ஆச்சாரியார் அவர்கள் யாரையும் கேளாமலே ஆரம்பக் கல்வித்திட்டத்தில் பல மாறுதல்கள் செய்து அமுலுக்குக் கொண்டு வந்தார். நாட்டில் ஆக்ஷேபனைகளை அரசியல் வாதிகள் ஆச்சாரியாரின் பேரில் உள்ள அதிருப்தியனாலும் எதிர்த்தார்கள் உண்மையிலே அத்திட்டம் மக்கள் விரும்பும் திட்டமா? என்பதை நாம் எந்த அரசியல் கட்சியிலும் சேராத முறையில் இங்கு விளக்க விரும்புகிறோம். இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டிய அவசியம் பற்றி இத்திட்டத்தை ஆதரிப்பவர்கள் கூறும் முக்கிய காரணங்களை எடுத்துக் கொண்டு அவைகள் காரிய சாத்தியமானவைகளா? என்பதை இங்கு ஆராய்வோம்.

நமது மாகாணத்தில் பள்ளிக்கு செல்லும் பருவமுடைய மாணவர்கள் மொத்தம் 80 லட்சம். பள்ளிக்குச் செல்லுபவர்கள் 40 லட்சம். மீதி 40 லட்சம் மாணவர்கள் படிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு படிப்பு வசதி அளிக்க புதிய பள்ளிக் கூடங்களோ ஆசிரியர்களோ ஏற்படுத்த பல லட்சம் ரூபாய் செலவாகும் அரசாங்கத்திடம் போதிய பணம் இல்லை. ஆதலால் இருக்கின்ற பள்ளிக்கூடத்தையும் ஆசிரியர்களையும் வைத்துக்கொண்டே 80 லட்சம் மாணவர்களையும் படிக்க வைக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு இத்திட்டம் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டது. 40 லட்சம்மாணவர்கள் படிகின்ற பள்ளிகளை ஒரு நேர படிப்பாக மாற்றினால் மறு நேரத்தில் மீதி 40 லட்சம் மாணவர்களும் படிப்பார்கள். இந்த ஷிப்டு முறை அமுலுக்கு வருவதால் புதிய பள்ளிக்கூடங்கள், புதிய ஆசிரியர்கள் தேவையில்லை. இருக்கின்ற பள்ளிகளையும், ஆசிரியர்களையும் கொண்டே 80 லட்சம் மாணவர்களை படிக்க வைத்து விடலாம் என்றுதான் புதிய திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வரப்பட்டது என்று கூறுகிறார்கள்

இப்பொழுது கிராமாந்திரங்களில் இத்திட்டம் அமுலில் இருக்கிறது. மாணவர்களுக்கு ஷிப்டு முறை இருக்கிறது. ஆனால் மாணவர்களின் எண்ணிக்கைதான் குறைந்து வருகிறது படிக்க வசதியில்லாத மற்ற மாணவர்கள் ஏன் படிக்க முன் வரவில்லை என்ற காரணத்தை அரசாங்கம் இன்னும் தெரிந்து கொள்ள முடியவில்லை. இக்கல்வித் திட்டத்தை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு இந்த அடிப்படையை ஆராயவில்லை, இன்றைய கிராமத்தில் இருக்கின்ற வறுமை நிலை தான் இதற்குக்காரணம் குழந்தைகளை பெற்றதாய் தந்தையர் தங்கள் குழந்தைகளை விவரம் தெரியத் தொடங்கிய நாள்முதல் வேலை வாங்குகிறார்கள், மாடு மேய்க்கச் செல்லுகிறார்கள். மண் தோண்டச் சொல்லுகிறார்கள். தண்ணீர் இறைக்க சொல்லுகிறார் குடும்பம் முழுதும் அவர்கள் உழைத்தும் கூட பருவ மழை ஒத்துழைக்கா விட்டால் பசியும் பட்டிணியும் தான் அவர்களுக்குக் கிடைக்கூடிய பரிசாக இருக்கும். வாழ்க்கை போராட்டத்திற்கே போதிய நேரமில்லாத விவசாயி எவ்வாறு தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவான். ஒவ்வொரு சிறுவனும் தனது வாழ்விற்கு தான் உழைத்தாக வேண்டும் என்ற நிர்பந்த நிலையில்

4-பக்கம் விலை 0—0—6

நாயுடுவின் திட்டங்கள் நசுக்கப்பட்டன!

அறிஞர் ஜி. டி. நாயுடு அவர்கள் கடந்த யுத்தத்திற்கு முன்பே நேஷனல் எலக்ட்ரிக் ஒர்க்ஸ் லிமிடெட் என்ற தொழிற்சாலை ஏற்படுத்தி அதில் எலக்ட்ரிக் மோட்டார்கள் மெஷின் டூல்ஸ், லேத்துகள், மில்லிங் மெஷின், பிளேனிங் மெஷின் எலக்ட்ரிக் மோட்டார்களை உற்பத்தி செய்யும பல யந்திரங்கள், ரேஷர் பிளேடுகளும் உற்பத்தி செய்யப்பட்டது.

யுத்தகால தேவைக்கு வேண்டிய வஸ்துக்களை இத்தொழிற்சாலை உற்பத்தி செய்து கொடுத்தும் கூட இதற்கு வேண்டிய தாம்பிரக்கம்பியோ, இரும்புத் தகடுகளோ கொடுக்க வில்லை. மற்றும் மெஷின் டூல்ஸ் உற்பத்தி செய்ய அனுமதியும் கொடுக்கவில்லை.

1941-ல் ரேடியோ உற்பத்தி செய்வதற்கு ஒரு பேக்டரியை ஆரம்பித்தார் இதை திறந்து வைத்தது சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள். இந்தத் தொழிற்சாலையில் குறைந்த விலையில் ரேடியோ செய்ய வேண்டும் என்று ஆரம்பித்த இத்தொழிற்சாலைக்கு அரசாங்கம் எந்த விதமான ஆதரவும் செய்யவில்லை. பிறகு அறிஞர் நாயுடு அவர்கள் பஸ்களுக்கு வேண்டிய எல்லா பாகங்களையும் (Auto mobile factory) மோட்டார் லாரி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆரம்பித்தார். இதற்கு அரசாங்கம் எந்த விதமான ஆதரவும் செய்ய வில்லை. ஆனால் இதற்கு நேர் விரோதமாக மேல் நாட்டிலிருந்து மோட்டார் பாகங்களைத் தருவித்து இங்கே அவைகளைப் பூட்டும் தொழிலுக்கு அரசாங்கம் ஆதரவு தந்தது.

அறிஞர் நாயுடு அவர்கள் உலகத்தில் எந்த நாட்டிலும் இது வரை தயாரிக்க முடியாத மிகவும் நாள்பட உழைக்கக் கூடிய பிளேடுகளைத் தயாரித்தும் அதற்கு அரசாங்கம் எந்த விதமான ஆதரவும் செய்யவில்லை.

இந்திய அரசாங்கம் இண்டஸ்ட்ரீஸ் அண்டு காமர்ஸ் இலாகாவின் சுமார் ஒரு கோடி ரூபாயிற்கு மெஷின் டூல்கள் வாங்குவதற்கு அறிஞர் நாயுடுவின் யோசனையைக் கேட்டார்கள். அப்பொழுது நாயுடு அவர்கள் ஒரு கோடி ரூபாயிற்கு அந்நிய நாட்டிலிருந்து யந்திரங்கள் வாங்குவதைக் காட்டிலும் 75 லட்ச ரூபாயில் ஒரு பேக்டரி ஆரம்பித்தால் ஒரு கோடி ரூபாய் விலை மதிப்புள்ள அந்த யந்திரங்களை இங்கே தயாரித்துக் கொள்ள முடியும் என்று ஒரு திட்டத்தைக் கொடுத்தார். அதை ஆரம்பிப்பதற்கு போத்தனூரில் கட்டிடமும் கட்டப்பட்டு விட்டது. மேல் நாட்டிலிருந்து வரும் தானே பதியும் டிக்கட் யந்திரங்களின் விலை 1000 ஆனால் அதை இங்கே உற்பத்தி செய்தால் 300 ரூபாயிற்கு விற்கலாம். இந்த இயந்திரங்கள் 1000 வேண்டும் என ஒரு கம்பெனியார் நாயுடுவை கேட்டார்கள். மற்றொரு கம்பெனியார்கள் 2000 வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். அனேக பஸ் கம்பெனிகளுக்கு இந்த யந்திரங்கள் மிகவும் அத்யாவசியமாகத் தேவையிருந்தது. இந்தக்கம்பெனியை ஆரம்பித்து ஓட்ட மேல் நாட்டிலிருந்து யந்திரங்களை வரவழைக்கவும், நிபுணர்களைத் தருவிக்கவும் நாணயமாற்று (Ex change) வசதிகளை அரசாங்கம் மறுத்து விட்டது. இந்தத் தானாகவே டிக்கட் பதிவு செய்யும் யந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இங்கு ஆரம்பித்திருந்தால், அந்த யந்திரங்கள் மூலமாகவே சினிமாப் புரஜக்டர்களும் தயாரிக்கலாம். இலகுவான விலைக்கு பள்ளிக் கூடங்களுக்கு விற்கலாம் மாணவர்களுக்கு சினிமா படங்கள் மூலமாக கல்வி போதிக்கலாம்.

இம்மாதிரி நாயுடு எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் சிதரடிக்கப் பட்டது. அந்தத் திட்டப்படி ஒரே வருஷத்தில் ஒரு கோடி ரூபாய் விலை மதிப்புள்ள யந்திரங்களை நமது நாட்டிலே தயாரிக்கலாம். வருடா வருடம் நமக்குத் தேவையான யந்திரங்களை உற்பத்தி செய்யலாம். இதனால் நமது நாட்டு யந்திரத் தொழில் வளருவதல்லாமல் நமது நாட்டுத் தொழிலாளிகளும் பிழைக்கலாம். இத்திட்டத்தை நாயுடுவின் மேற்பார்வையிலே நடத்தித் தருவதாக உறுதி மொழிகள் கூறியும், இதற்கு அன்றுள்ள மத்திய சர்க்கார் காலதாமதம் செய்தது. அதற்குள் நாயுடு அவர்கள் வருமான வரி சம்பந்தமான சிரமங்களுக்குள் சிக்கி தனது பேக்டரிகளையும் நிலங்களையும் விற்கும்படியான நிலை ஏற்பட்டது. டீசல் என்ஜின் பேக்டரி ஆரம்பிக்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சியும் தோற்றது Automatic Ticket Issuing Machines) தானாகவே டிக்கட் பதிவு செய்யும் யந்திரம் உற்பத்தி செய்ய நாயுடு அவர்கள் ஏராளமாக செலவிட்டு, தனது ஆட்களை இங்கிலாந்துக்கு அனுப்பி அதற்கு வேண்டிய யந்திரங்களையும், நிபுணத்துவம் பெறுவதற்கும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் கொஞ்சமல்ல! இவ்வாறு நாயுடு அவர்கள் முயற்சிகள் எல்லாம் நசுக்கப்பட்டன.

கல்கியின் சோஷலிஸ மோகம்!

ஆச்சாரியாருக்கு ஆதரவு தேடவா?

(இடி நிருபர் வெடி)

கல்கி பத்திரிகையின் ஆசிரியர் ரா. கிருஷ்ண மூர்த்தி ஆச்சாரியாரின் பக்தர். ஆச்சாரியார் அர்த்தமில்லாமல் எது சொன்னாலும் ஆழ்ந்த கருத்தோடு பேசுகிறார் என்று எழுதுவதே கல்கியின் குறிக்கோள் நாளது வரை கல்கியின் எழுத்து பேச்சு எல்லாம் ஆச்சாரியாரை ஆதரிப்பதாகவே இருந்தது என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. காமராஜரை இகழ்ந்து கட்டுரைகள் எழுதி ஆச்சாரியாருக்கு ஆதரவு தேட முயன்றது ஒரு காலத்தில் 'பெரிய பதவியும் சின்ன புத்தியும் என்று' காமராஜரை இகழ்ந்தது கல்கியின் எழுத்துக்கு மக்கள் மதிப்புத்தரவில்லை. அதற்கு மாறுதலாக கல்கியின் ஆதரவு குறைய ஆரம்பித்தது. காமராஜரின் செல்வாக்கு வளர்ந்தது ஆச்சாரியாருக்கு எதிர்ப்பு முளைத்தது. இது தான் கல்கியார் சாதித்தது.

காங்கிரஸ் கோட்டைக்குள் இருந்து காமராஜருக்கு வேட்டு வைக்க கல்கியினால் முடியாது. அந்த ஆச்சாரியர் கூட்டங்களினாலும் முடியாது இதற்காக காமராஜரின் செல்வாக்கை மறைமுக சூழ்ச்சியினால் "கல்கி" ஒழிக்க முற்படுகிறது. கல்கியின் சோஷலிஸ மோகமும் ஆச்சாரியாருக்கு ஆதரவு தருவதற்குத்தான் காமராஜரை எதிர்க்கிறவர்களுக்கெல்லாம் கல்கி விளம்பரம் தருவது சர்வ சகஜமாய் போய் விட்டது.

சிவஞான கிராமணியார் பேச்சு, எழுத்துக்கள், படங்கள் தொடர்ந்து கல்கியில் வெளிவருகிறது சிவஞானத்தின் கோஷ்டியை ஆச்சாரியாருக்கு இணைக்கும் வேலை இது. சிவஞானம் கோஷ்டி சென்ற இடமெல்லாம் காமராஜருக்கு வசவு மாறி பொழிவது எல்லோரும் அறிந்ததே. இந்தத் திருப்பணியை கல்கி செய்வதால் சிவஞானத்தின் செல்வாக்கை ஆச்சாரி

வீட்டுக்காரர் தொல்லை

வீடு வாடகைக்குத் தருவோர் சிலர் கலியுக எமதர்மர்களாக இருக்கிறார்கள். தேதியானதும் வாசற்படியில் நின்று வசை மாறி பொழிவது சர்வ சகஜமாய் போய் விட்டது. குடியிருப்போர் அப்பாவிகளாக இருந்தால் வீட்டின் கூரைகளைப் பிரித்து விடுவேன், சட்டி பானைகளை வெளியில் எடுத்து விரட்டி விடுவேன் என்று பயமுறுத்துதல் இவைகள் எல்லாம் நடக்கும்!

குடியிருந்த வீட்டுக்காரன் வீட்டைக் காலி செய்து வேறு வீட்டுக்குக் குடிபோய் விட்டால் உடனே காலியான வீட்டிற்கு நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டுக்கொண்டு அந்த வீட்டை வாடகைக்குக் கேட்பார்கள். ஒஹோ நமது வீட்டிற்கு பெரிய கிராக்கி இருக்கிறது என்று 25 ரூபாயிற்குக் கொடுத்த வீட்டை 40 ரூபாய் என்று வீட்டுக்காரர் சொல்லுவார். வந்தவர்களெல்லாம் ஐயோ இவ்வளவு வாடகையா? என்று கூறிவிட்டு வேறு வீடு பார்ப்பார்கள்.

வீட்டுக்காரர்கள் வாடகையை உயர்த்திச் சொல்லிக்கொண்டே பல மாதங்கள் பிறருக்கு வாடகைக்குக் கொடுக்காமல் வைத்திருப்பதில் தனக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்பதை உணர மாட்டார்கள். ஆனால் காலத்தை அனுசரித்து வீட்டை குறைந்த வாடகைக்கு கொடுத்திருந்தால் பல மாதங்கள் வீட்டை காலியாக வைத்திருக்கவேண்டிய அவசியமிருக்காது. அவசரத்தில் ஒருவன் அதிக வாடகை கொடுத்து குடியிருக்க சம்மதித்தாலும், நாளா வட்டத்தில் வீட்டைக் காலி செய்து விட்டு வேறு வீடு போகத்தான் பார்ப்பான். பிறகு அந்த வீட்டுக்கு ஆள் வருவது ஒரு மாதம் இரண்டு மாதம் பிடிக்கும். அந்த ஒரிரண்டு மாத வாடகை கிடைக்காத நஷ்டத்தை வீட்டுக்காரர்கள் உணருவதில்லை. குடியிருப்போர் சங்கம் ஒன்று நிறுவலாமா? அதன் மூலம் நாம் கொடுக்கின்ற வாடகைகளை ஒரு நிர்ணயம் செய்யலாமா? நமக்கென ஒரு வக்கீல் நியமித்து ஏழைகளின் வாடகைச் சிரமங்களை எடுத்துக் கூறலாமா? என்று யோசிக்கிறோம். உங்கள் வீட்டுக்காரன் கொடுக்கும் தொல்லைகளை எழுதுங்கள்.

R S. .சாமி.

சுக்கிர வாரப்பேட்டை ரோட்டிலுள்ள

வசந்தம் உணவு விடுதிக்கு

விஜயம் செய்யுங்கள்

சாப்பாடு 0—4—0

இவர்கள் யார்?



ஜோதிடம் புராணம் அல்ல!
கட்டுக் கதைகள் அல்ல!
விஞ்ஞானம்! என்கிறார்கள் இவர்கள்.



பல்லாயிரம் ஆண்டுகளாக வான ஆராய்ச்சிகள் செய்த பேரறிஞர்கள் வழி வகுத்துக்காட்டிய வாழ்க்கை நூல் என்கிறார்கள். எதிர் காலத்தை நிச்சயமாகச் சொல்லலாம் என்று சவால் விடுக்கிறார்கள். ஜோதிடம் பொய் என்று கூறுபவர்கள் நேரில் வரலாம், சந்தேகங்களைத் தெரிந்து கொள்ளலாம் என்கிறார்கள். இவர்கள் விஞ்ஞான ரீதியாக ஜோதிட கலையின் உண்மையை எடுத்துக்கூற, கோவை முனிசிபல் ஆபீசுக்கு எதிர்புறமுள்ள மேல் மாடியில் சர்வ சித்தாந்த ஜோதிட நிலையம் ஒன்று நிறுவியுள்ளார்கள். வியக்கும்படி வாழ்வில் நடந்த நடைபெற விருக்கின்ற நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுகிறார்கள்.

ந. நி.

கல்யாண வீட்டில் 'ஐயோ பசிக்குதே'

கோவை டவுனில் கல்யாணம் நடக்கும் வீட்டில் கிராமபோன் பிளேட்டுகளை வைக்கிறார்கள் லவுட் ஸ்பீக்கர் மூலமாக ஒலி பரப்பி மணிக்கணக்காக சில பிளேட்டுகள் சதா கத்திக்கொண்டே இருக்கும் அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் தூங்கவே முடியாது பெருந்தொல்லையாக இருக்கும். இரவு நேரத்தில் அந்த கல்யாண வீட்டில் விருந்து நடைபெறும். முக்கிய பிரமுகர் எல்லாம் அறுசுவையுண்டியருந்தி வெளித்திண்ணையில் உட்கார்ந்து கொண்டு வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண்டு அரட்டை அடித்துக் கொண்டிருப்பார்கள். அங்குள்ள கிராமபோன் "ஐயா பசிக்குதே அம்மா பசிக்குதே" என்ற பாட்டைப் பாடும் வெளிப்புறத்தில் தாழ்த்தப்பட்ட ஜனங்கள் கல்யாண வீட்டில் சாப்பாடு கிடைக்கும் என்று காத்துக்கொண்டிருப்பார்கள் கல்யாண வீட்டுக்காரர் வெளியில் வந்து அந்த ஏழை ஜனங்களைத் துரத்துவார்! ஆனால் அவர் வீட்டு கிராமபோன் "ஐயோ பசிக்குதே அம்மா பசிக்குதே" என்று உரத்த குரலில் பாடிக்கொண்டிருக்கும்.

○

பீடிகளில் சிறந்தது

S.P.S. மஜீத்

மார்க் பீடிகள்

சகல விதமான ஜவுளிகளுக்கும் சிறந்த இடம்

பிரகாசம்

ரெடிமேட் ஸ்டோர்ஸ்

இன்றே விஜயம் செய்யுங்கள்.

சுவையில் சிறந்தது

துருகாலால்

ஊறுகாய்

ஜி. டி. நாயுடு வாபஸ் வாங்கமாட்டார்

டாக்டர் சுப்பராயன் முயற்சி தோல்வி

ஸ்ரீ ஆதித்தன் ராஜிநாமாச் செய்த ஸ்தானத்திற்கு பிப்ரவரி மாதம் 27-ம் தேதி தேர்தல் நடைபெறப் போகிறது. ஜோதி வெங்கடாசலம் மதுவிலக்கு மந்திரி காங்கிரஸ் சார்பில் நிற்கிறார். ஜி. டி நாயுடு போட்டியிடுகிறார். ஜி. டி. நாயுடுவை வாபஸ் வாங்கிக்கொள்ளும்படி பல பிரமுகர் தினமும் முயற்சி செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால் நாயுடு ஒரே போக்காக யாருடைய வார்த்தையும் கேளாமல் திட சித்தத்தோடு போட்டியிடுகிறார். இந்தத் தேர்தலில் எம். எல். ஏக்கள் ஓட்டு போடவேண்டியது. சுயேட்சை எம். எல். ஏக்கள் கம்யூனிஸ்ட் எம். எல். ஏக்கள் எல்லாம் நாயுடுவை ஆதரிக்கிறார்களாம். காங்கிரஸ் எம். எல். ஏக்களும் கூட சிலர் நாயுடுவை மறை முகமாக ஆதரிப்பதாக வதந்தி.

கடைசி முறையாக டாக்டர் சுப்பராயன் தனக்கு மேலிடத்தில் செல்வாக்கு இருக்கிறது என்று காட்டி கொள்வதற்காக தனது நண்பர் ஜி. டி. நாயுடுவை வாபஸ் வாங்கும்படி எடுத்துக்கொண்ட முயற்சியும் தோல்வியாகி விட்டது-

○

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யாருக்குச் சேர்த்தும் வேலையும், காமராஜரை திட்ட சிவஞானத்திற்கு ஊக்கமளிப்பதும் ஆகிய இரண்டு வேலையும் நடைபெறுகிறது. 'கல்கி' காங்கிரசுக்குள் செய்யும் வேலை இது. காங்கிரசுக்கு எதிர்ப்பு முகாமில் ஆச்சாரியருக்கு ஆதரவும் இன்றைய அரசியல் உலகில் குறிப்பாக சட்ட சபையில் ஆச்சாரியாருக்கு ஆதரவு தேடுவதற்கு சோஷலிஷ கட்சி பலமும் வேண்டுமல்லவா? அதற்காக தமிழ் நாட்டு சோஷலிஸ கட்சி காரியதரிசி சின்னதுரை அவர்களை கல்கியின் மேலட்டைப் படத்தில் போட்டு விளம்பரம் தந்து, அதற்கு சின்னதுரை அவர்கள் கைம்மாறாக கல்கிக்கு விளம்பரம் கொடுக்க கோவைக்கு அழைத்து வந்து, விருந்து விழாக்கள் நடத்தினர். இந்த வகையில் கல்கியின் வார்த்தையை சின்னதுரை கேட்கவும், சின்னதுரை வார்த்தையை சோஷலிஷ கட்சியும் கேட்டுத் தானே ஆகவேண்டும். இதெல்லாம் மக்களுக்கு நன்மை செய்யப் போவதாகவும் கொள்கைக்காகப் போராடுவதாகவும் கூறிக்கொண்டு ஆச்சாரியாருக்கு ஆதரவு தருகின்ற வேலையாகும். இதே நேரத்தில் தொழிலாளர்கள் மத்தியில் கல்கி தனது சொந்த செல்வாக்கையும் வளர்த்துக் கொள்ளுகிறது. கோயமுத்தூரில் உள்ள வக்கீல் வெங்கட்டராமன் அவர்களும் ஒரு சோஷலிஸ்ட். இவர் ஆச்சாரியாரின் பக்தர். சின்னதுரையின் நண்பர். பிராமணர் வகுப்பைச் சேர்ந்தவர். இந்த ஆட்சியின் மத்தியில் சிக்குண்டவர் நமது நண்பர் சின்னதுரை! இவரையும் ஒரு வகையில் சரிப்படுத்தி விடுவார்களே என்ற கவலை நமக்கு!

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்தப் புதிய திட்டம் ஒரு கண் துடைப்பாகத்தான் இருக்கும். அல்லது 80 லட்சம் மாணவர்களையும் படிக்க வைக்கிறோம் என்று தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதற்கு இருக்கும். ஆனால் உண்மையில் அரசாங்கம் கருதுவது போல் 80 லட்சம் மாணவர்களுக்கும் கல்வி போதிக்க முடியாது.

இந்தப் புதிய திட்டத்தில் மாணவர்களின் படிப்பு நேரம் குறைக்கப்பட்டிருக்கிறது. முன்புள்ள திட்டத்தில் அதிக நேரம் படித்தே லாயக்கில்லா மாணவர்கள் என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. இப்பொழுது இந்தப் புதிய கல்வித் திட்டத்தில் குறைவான நேரத்தில் படித்த மாணவர்கள் எப்படி தகுதியுடையவர்களாக இருக்க முடியும். முன்புள்ள கல்வித் திட்டத்தை அமுல் நடத்தும் போது அன்றைய கல்வி அதிகாரிகள் மனோதத்துவப்படி மாணவர்களுக்கு படிப்பினை புகுத்தப்படுகிறது. அவரவர் உள்ளமறிந்து போதிக்கப்படுகிறது. படிப்பவர்களுக்கு சிரமம் இருக்கக்கூடாது என்றுதான் சொன்னார்கள்.

ஆனால் புதிய கல்வித்திட்டப்படி அன்று மனோதத்துவப்படி கூறிய அறிஞர்களை எல்லாம் மறை முகமாக முட்டாளாக்கப் பட்டு விட்டது.

இன்றுள்ள கல்வி அதிகாரிகள் ஆட்சியார் போட்ட கட்டளையை அமுல் நடத்துகிறவர்களாக திட்டத்திற்கு ஆதாரவு ஆதாரங்களைத்தானே காட்டுவார்கள்? துர்பாக்கியமான நமது நாட்டில் கல்வித் திட்டம் மாறி மாறி வருகிறதே யல்லாமல் கல்லாமையைப் போக்கும் திட்டம் இன்னும் வரவில்லை. ஒரு அறிஞர் ஒரு பாஷைக்கு மேல் மாணவர்களுக்கு போதிக்காது என்கிறார். மற்றொருவர் இரண்டு பாஷை போதிக்கலாம் என்கிறார். இன்னொருவர் மூன்று பாஷை போதிக்கலாம் என்கிறார். கைத்தொழில் கல்வி வேண்டும் என்கிறார் ஒருவர். அந்தக் கைத்தொழில் கூடமுடைதல் சட்டி பானை செய்தல் என்கிறார். இப்படியே இந்த குழறு படித் திட்டத்தில் நமது இளைஞர் சந்ததிகள் சிக்கி கல்வி கற்று வருகிறார்கள். இந்த குழறு படியில் உருவான மாணவர்கள் எதிர்காலத்தில் இன்னும் பெரிய குழறுபடி கல்வித் திட்டத்தைத்தான் உருவாக்குவார்கள். ஆகவே நம்மை நீங்காத இருட்டடிப்பில் ஆழ்த்துவதற்குதான் கல்வித் திட்டம் பயன்படுகிறது என்று வருத்தத்தோடு நமது கருத்தை கூறிக்கொள்ளுகிறோம்.

* * *

குணம் மணம் நிறைந்த

333

காலணா

அரையணா

கட்டு புகையிலை

தங்க பஸ்பம் புகையிலையை

உபயோகியுங்கள்.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்

எண்ணெயில் சிறந்தது

நல்லெண்ணெய்

அதிலும்

மரச்செக்கில் ஆட்டிய

எண்ணெய் மாண்புடையது

அதிலும்

ஸ்ரீ ஆறுமுகம்

நல்லெண்ணெய் ஸ்டோரில்

கிடைப்பது

ஆரோக்கியத்திற்குகந்தது

ஸ்ரீ ஆறுமுகம் நல்லெண்ணெய்

ஸ்டோர்ஸ்

22/1 எல்லய்ய சந்து, கோவை.

நறுமணமுள்ள

ராஜா காபித்தூள்

உபயோகியுங்கள்.

ராஜ வீதி, கோவை

ஆசிரியர், வெளியிடுபவர்:— பண்டிட் ஜெயிலானி விஷாரத், கோவை. அச்சிட்டது—: ராயல் பிரஸ் கோயமுத்தூர்.